

ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 3 | ஜனவரி 1998 | கானம் : 6

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி


(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 3 ஜனவரி 1998 கானம் : 6

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 26 | 4 |
| 3. | மஹா பாரதக் கதைகள் - 1 | 5 |
| 4. | நக்ஷத்திரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 7 | 11 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி | 13 |
| 6. | வேத கதைகள் - 8 | 15 |
| 7. | மணிமங்கலம் ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி | 21 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 3 | 25 |
| 9. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 29 | 28 |
| 10. | செய்திகள் | 31 |
| 11. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |


அறிவிப்பு : **பாவ** லோகத்தில் ஒரு ஸஞ்சாரம் -
அடுத்த இதழில் பிரசுரமாகும்.



ப்ரஹ்மோத்ஸவ வைபவத்தில் ஸ்ரீ கோவிந்த பட்டாபிஷேகம்
அன்று 'மதுராசல மனை'யில் பக்தர்களுடன் ஸ்ரீ ஸ்வாமிகள்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

பல்லவி

*இத்தனை க்ருபை என் மேல் தகுமோ ஐயா*
*நப்பின்னை நாதனே யமுனைத் துறைவனே (இத்தனை)*

அனு பல்லவி

*உண்டு உறங்கி ஒரு தொண்டும் செய்யாமல்*
*காலம் உருண்டோடுதே (என்) ஐயா (இத்தனை)*

சரணங்கள்

*பக்தி என்பது என்னவென்று நானறியேன்*
*சக்தியும் இல்லை தவம் புரிவதற்கு*
*பந்தங்களையும் நான் விட்டவனில்லை*
*மந்த மதியனும் நானே ஆவேன் (இத்தனை)*

*வேதமும் நான் அறிந்தோனில்லை - உன்*
*பாதமும் நான் பணிந்தோனில்லை - ஒரு*
*சாதனையும் நான் புரிந்தோனில்லை, சாது*
*போதனையும் கேட்டோனில்லை (இத்தனை)*

*உன் தலங்களுக்கு வந்தோனில்லை*
*உள்ள மலங்களும் போனவனில்லை*
*உயர்ந்த சீலமும் கொண்டவனில்லை*
*உத்தமனே மாலவனே முரளீதரனே (இத்தனை)*

மனுஷ்ய குருவானவர் மஹா மந்த்ரத்தை உனது காதில் மட்டும் உபதேசிக்கிறார். தெய்வ குருவோ ஆத்மாவுக்குள் சைதன்யத்தை செலுத்துகிறார்.

**- பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணரின்**
**உபதேசங்களிலிருந்து**

## 26

ஸமீப காலங்களில், ஸ்வாமிகள் அடிக்கடி மதுரபுரி ஆஸ்ரமம் சென்று தியானத்தில் இருந்து வருகின்றார்கள். ஸ்ரீமதி ஆண்டாள் என்ற பக்தை நம் ஸ்வாமிகளிடம் புத்ர வாத்ஸல்யத்துடன் ஈடுபாடு கொண்டவர். நம் ஸ்வாமிகளும் அவர்களை, தன்னுடைய தாயார் என்றே அனைவரிடமும் கூறுவார். எப்பொழுதெல்லாம் ஸந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அப்பொழுதெல்லாம் ஸத் ஸங்கத்திற்கு வந்து கைங்கர்யம் செய்வார். இந்த மாமிக்கு கைங்கர்யத்தில் அலாதி ருசி.

சில தினங்கள் முன்பு, மாமி ஆஸ்ரமம் வந்து இருந்தார். இப்பொழுது எங்கும் மழை பெய்து வருவதால் மதுரபுரியிலும் மழை பெய்து, புஷ்பச் செடிகள் நன்றாக புஷ்பிக்கின்றன. ஒரு நாள், நம் ஸ்வாமிகள் தன்னுடைய அறையில் தியானத்தில் ஈடுபட்டிருந்தார். மாமியோ செடியில் உள்ள புஷ்பங்கள் எல்லாவற்றையும் பறித்து, வெளியில் அமர்ந்தபடியே, அழகாக மாலை கட்டிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது மாமிக்கு ஒரு ஸுகமான கற்பனை. அதில், தான் யசோதை என்ற பாவம். கண்ணன் மிகவும் அழகாக தன்னை அலங்கரித்துக் கொண்டு, குறும்புகள் செய்து கொண்டே இவரிடம் வந்து வெண்ணை கேட்கின்றான். யசோதை பாவத்தில் உள்ள இந்த மாமியோ, நீ ராதையிடமோ அல்லது கோபிகைகளிடமோ சென்று வாங்கிக் கொள் என்று விரட்டுகின்றாள். அதற்கு கண்ணனோ, எனக்கு நீ தரும் வெண்ணை தான் பிடிக்கும் என்று அடம் பிடிக்கின்றான். இப்படியாக மாமிக்கு ஒரு ஸுகமான கற்பனை.

தியானம் முடிந்து வெளியில் வந்த ஸ்வாமிகள் மாமியைப் பார்த்து ''என்ன ஆழ்ந்த சிந்தனையில் உள்ளது போல் தெரிகின்றதே! கண்ணனுக்கு ஸமர்ப்பிக்க கொஞ்சம் வெண்ணெய் கடைந்து எடுத்து வருகின்றீர்களா?'' என்று கேட்டார்.

மாமியின் நிலையை சொல்லவும் வேண்டுமா!

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# மஹா பாரதக் கதைகள் - 1

ஸ்ரீ மஹா பாரதம், சாந்தி பர்வா, நூற்று ஐம்பத்திரண்டாவது அத்தியாயத்தில் தர்மபுத்ரர் பீஷ்மரிடம், அரசே! மரணமடைந்த மனிதன் திரும்பவும் உயிர் பெற்றான் என்பது உண்டோ? இது பிதாமஹரால் காணப்பட்டதாவது, கேட்கப்பட்டதாவது உண்டோ? என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

''ஏ! பார்த்த! வைதிசமென்னும் நகரத்தில் நடந்ததும், கழுகு நரிகளைச் சேர்ந்த ஸம்பாஷணையுமான பழைய இதிஹாஸத்தைக் கேள். ஒரு ப்ராஹ்மணனுக்கு, தவமிருந்து பெறப்பட்டவனான ஒரு பாலகன் விதி வசத்தால் மரணமடைந்தான். யௌவன வயதை அடையாதவனான அந்த பாலகனுடைய பிரிவைத் தாங்க முடியாமல் அவன் பெற்றோர்களும் பந்துக்களும் மிகவும் துக்கித்தார்கள். அவர்கள், அந்த பாலகனை மயானத்திற்கு எதிராக எடுத்து வந்து நின்றார்கள். அப்பொழுது அந்த பாலகனுடைய மழலை வார்த்தைகளை நினைத்து நினைத்து மிகவும் விசனப்பட்டு, ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு அழுதார்கள்.

இவர்களுடைய அழு குரலைக் கேட்டு ஒரு கழுகு அவ்விடம் வந்து சேர்ந்தது. பந்துக்கள் அனைவரும் குழந்தையைப் போட்டுச் செல்ல மனமில்லாமல் அழுது கொண்டே இருந்தார்கள். அதைக் கண்ட கழுகு ஒரு வசனத்தை சொல்லத் தொடங்கியது. ''இறந்தவனான இந்தக் குழந்தையை போட்டுச் செல்லுங்கள். தாமதிக்க வேண்டாம். இவ்விடத்தில் ஸ்த்ரீகளும் புருஷர்களுமாக பல்லாயிரக்கணக்கானோர் மரித்தவர்களாக பந்துக்களால் விடப்படுகிறார்கள். உலகம் யாவும் சுக துக்கங்களால் பீடிக்கப்பட்டிருக்கின்றன. சேர்க்கையும் பிரிவும் முறையே காணப்படுகின்றன. மரித்தவர்களை எடுத்துக் கொண்டு எவர்கள் போகிறார்களோ அவர்களும் இறக்க வேண்டியவர்கள்தான். அவர்களை எடுத்துச் செல்பவர்களுக்கும் அது தான் கதி.

இப்படி அனைவரும் தத்தம் ஆயுள் அளவுப்படியே இவ்வுலகை விட்டுச் செல்லுகிறார்கள். கழுகுகளாலும், நரிகளாலும் சூழப்பட்ட இந்த இடத்தை விட்டு உடனே விலகுங்கள். நண்பனானாலும் பகைவனானாலும் இறந்தவன் மறுபடியும் ஜீவிப்பதில்லை. எல்லா பிராணிகளின் கதி இதுதான். மனுஷ்ய லோகத்தில் பிறந்த அனைவரும் இறந்தே தீருவார்கள்.

யமனுடைய வழியில் சென்று யார்தான் இறந்தவனை மீட்டு வர முடியும். சூரியன் அஸ்தமயத்தை அடைவதற்குள் புத்ர ஸ்நேஹத்தை விட்டு, கோரமான பிராணிகளும் ஸஞ்சரிக்கப் பயப்படும் இந்த மயானத்தை விட்டுச் செல்லுங்கள்'' என்று கூறியது.

கழுகின் வார்த்தையைக் கேட்ட பந்துக்கள் இறந்த குழந்தையை பார்க்க ஆசையற்றவர்களாய் திரும்பிச் சென்றார்கள். அப்பொழுது ஒரு நரியானது வளையிலிருந்து வெளி வந்து பந்துக்களிடம் சொல்லத் தொடங்கியது. ''மனுஷ்யர்கள் தயை இல்லாதவர்களன்றோ? மூடர்களே! இதோ ஸூர்யனிருக்கிறான், பயப்பட வேண்டாம்; ஸ்நேஹத்தைச் செய்யுங்கள். அழகு மிகுந்தவனான இந்த பாலகன் ஒரு முஹூர்த்தத்தில் ஜீவித்தாலும் ஜீவிக்கலாம். புத்ரனிடம் தயை இல்லாதவர்களாகி பூமியில் தர்ப்பையைப் பரப்பி புத்ரனை ஏன் போட்டுவிட்டு போகிறீர்கள்?

பசுக்களுக்கும் பறவைகளுக்கும் புத்ரர்களிடம் ஸ்நேஹம் எவ்விதமென்று நீங்கள் அறியவில்லையா? ப்ரியமான புத்ரர்களை பாராமலிருக்கும்பொழுது எவர்க்கு சோகமில்லையோ, அவர்கள் புத்ரர்களை போஷிப்பதில் மிகவும் ப்ரீதியுள்ள தாய் தந்தையர்களே அல்ல. குலத்தை வ்ருத்தி செய்யும் இந்த குழந்தையை விட்டு எங்கே செல்கிறீர்கள்? வெகு நேரம் கண்ணீரை விடுங்கள். வெகுநேரம் ஸ்நேஹத்துடன் பாருங்கள். இப்படிப்பட்ட ப்ரிய வஸ்துக்களை விடுவது பெரிய கஷ்டம். புதிதாகக் கல்யாணஞ் செய்து கொண்டு ஸ்நாநத்தாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டவன் போன்றவனும், தாமரை மலர் போல் நீண்ட கண்களுள்ளவனுமான இவனை விட்டு எப்படி போகிறீர்கள்?'' என்று சொல்லிற்று. இவ்விதம், சோகத்துடன் அழுது கொண்டு செல்லும் மனிதர்கள் நரியின் வசனத்தைக் கேட்டு மீண்டும் வந்தார்கள்.

உடனே கழுகு சொல்லத் தொடங்கியது. ''க்ரூரமும் அல்ப புத்தியுள்ளதும் இழிந்ததுமான நரியின் சொல்லைக் கேட்டு ஏன் திரும்புகிறீர்கள்? ஐந்து பூதங்களால் விடப்பட்டதும் காய்ந்து கட்டை தன்மையை அடைந்ததும் சேஷ்டையற்றதுமான இந்த குழந்தையைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? உங்களைப் பற்றி கவலைப்படுங்கள். எதைச் செய்தால் பாபத்திலிருந்து விடுபடுவீர்களோ அத்தகைய தவத்தை செய்யுங்கள். தவத்தால் அனைத்தையும் அடையலாம். அழுகை எதை சாதிக்கும்? துன்பமும் இன்பமும் சரீரத்துடன் கூட உண்டாகின்றன. அந்தக் காரணத்தால் இந்தக்குழந்தை முடிவில்லாத சோகத்தை கொடுத்துவிட்டு செல்லுகிறது.

தந்தையின் கர்மத்தால் புத்ரனும் புத்ரனின் கர்மத்தால் தந்தையும் இருப்பதில்லை. மனிதர்கள் புண்ய பாவங்களால் கட்டப்பட்டு வேறு வேறு வழியில் செல்கின்றனர். முயற்சியுடன் தர்மத்தை செய்யுங்கள்; அவ்விதம் அதர்மத்திலிருந்து விலகுங்கள். காலந் தவறாமல் தேவர்களிடத்திலும் ப்ராஹ்மணர்களிடத்திலும் வேண்டியதைச் செய்யுங்கள். சோகத்தையும் தீனத்தையும் விடுங்கள். புத்ர ஸ்நேஹத்தை விலக்குங்கள். சுபமான எந்தக் கர்மத்தையும் அவ்விதமே மிக க்ரூரமான கர்மத்தையும் எவன் செய்கிறானோ அவனே அதனதன் பலனை அனுபவிக்க வேண்டும். பந்துக்களுக்கு இதில் என்ன? தர்மப்படி ஸமமான பார்வையுள்ள காலன் யாவர்க்கும் ப்ரபுவன்றோ? ம்ருத்யுவானது யௌவனத்திலிருப்பவர்களையும், சிறுவர்களையும், வயது சென்றவர்களையும், கர்ப்பத்திலிருப்பவர்களையும், அனைவரையும் பீடிக்கிறது. இவ்வுலகம் இப்படி இருக்கிறது'' என்று சொல்லிற்று.

நரி சொல்லத் தொடங்கியது. ''அந்தோ! புத்ரனிடமுள்ள ஸ்நேஹத்தால் துன்பமடைந்து மிகவும் சோகப்படும் உங்களுடைய ஸ்நேஹமானது அல்ப புத்தியான இக்கழுகால் அல்பமாக செய்யப்பட்டது. கஷ்டம்! புத்ரனை விட்டுப் பிரிந்து புத்ரனில்லாத இடத்தையடைந்து அழும் உங்களுக்கு கன்றில்லாப் பசு போல் மிகவும் துக்கமுண்டாகும். பூதலத்தில் மனிதர்களுக்குள்ள ஸ்நேஹத்தை இப்பொழுது அறிகிறேன். ஏனெனில், ஸ்நேஹத்தைக் கராணமாகச் செய்து கொண்டு எனக்கும் கண்ணீர் விழுந்தது.

எப்பொழுதும் முயற்சி செய்ய வேண்டும். பிறகு, தெய்வத்தால் ஸித்திக்கும். தெய்வமும் பௌருஷமும் ஒரே உறுதியாயிருக்க வேண்டும். எப்பொழுதும் வெறுப்பில்லாமல் இருக்கவேண்டும். வெறுப்படைந்தால் எங்கிருந்து சுகம் வரும்? முயற்சியாலன்றோ பொருளடையப்படுகிறது? ஏன் தயையில்லாமற் செல்லுகிறீர்கள்? தன் மாம்ஸத்திலிருந்து உண்டானதும் தன் பாதிச் சரீரம் போன்றதும், பித்ருக்களுக்கு வேண்டி வம்சத்தை வ்ருத்தி செய்வதுமான சரீரத்தை வனத்தில் தள்ளிவிட்டு எங்கே போகிறீர்கள். ஸூர்யன் அஸ்தமயத்தையடைந்து ஸந்த்யா காலம் வந்துவிட்டால் புத்ரனை எடுத்துக் கொண்டாவது போங்கள் அல்லது நீங்கள் எல்லோரும் இங்கேயே இருக்கவாவது செய்யுங்கள்'' என்றது.

கழுகு சொல்லத் தொடங்கியது. ''மானிடர்களே! இப்பொழுது நான் பிறந்து ஆயிரம் வருடத்திற்கும் மேலாகிறது. ஸ்த்ரீயோ, புருஷனோ, நபும்ஸகனோ இறந்தவன் பிழைத்ததாகக் காணேன். பறவைகள், இதர ப்ராணிகள், அசையும் பொருள்கள் மற்றும் அசையாப் பொருள்கள் அனைத்தும் நிலையானவைகளல்ல. தேஜஸின்றி சூன்யமாக கிடக்கும் இந்த சரீரத்தை விடுங்கள். வேறு தேகத்தில் ஸம்பந்தமடைந்து கட்டையாயிருக்கும் இந்த சிசுவை உபாஸிக்கிறீர்களே?

உயிரைவிட்ட குழந்தைக்குக் கண்ணீரை விட்டு விட்டு ஏன் போகாமலிருக்கிறீர்கள்? இந்த ஸ்நேஹம் பயனற்றதாயிற்றே. ச்ரமமும் பயனற்றது. அறிவும் பேரறிவுமுள்ளவனும், புத்தியையும் நல்லறிவையும் கொடுப்பவனுமான என்னால் நல்வசனத்தைக் கேட்கும்படி செய்யப்பட்டீர்கள். மானிடர்களே! திரும்புங்கள்; நடந்ததை நினைத்தாலும் காண்பதாலும் சோகமானது இரு மடங்காகிறது'' என்றது. இவ்விதம் கழுகின் வசனத்தைக் கேட்ட மனிதர்கள் திரும்பினார்கள்.

உடனே நரி, ''தங்கம் போன்று ஜொலிப்பவனும் ஆபரணங்களால் நன்றாக அலங்கரிக்கப்பட்டவனும் பித்ருக்களுக்குப் பிண்டமளிப்பவனுமான இந்த புத்ரனை கழுகின் சொல்லால் எப்படி விடுகிறீர்கள்? இறந்த புத்ரனை விட்டுச் செல்வதால் ஸ்நேஹத்திற்கும் புலம்பலுக்கும் அழுகைக்கும் நிவ்ருத்தியில்லை. நிச்சயமாக தாபமுண்டாகும்.

சம்புகனென்னும் ப்ராஹ்மணன் அல்லாதானைக் கொன்று, இறந்த ப்ராஹ்மணக் குழந்தையை ஸ்ரீ ராமர் மீட்டுத் தரவில்லையா? அப்படியே, ஶ்வயித்தியன் என்னும் ராஜ ரிஷியின் பாலகன், காலத்தின் முடிவை அடைந்து மரித்தவன், தர்ம நிஷ்டரென்னும் முனிவரால் திரும்பவும் ஜீவித்திருக்கும்படி செய்யப்பட்டான். அது போல், ஸித்தனோ, முனியோ, தேவதையோ ஒருவனிருக்கலாம். அவன் துன்பமுள்ளவர்களாக இங்கு அழுதுகொண்டிருக்கும் உங்களுக்கு தயை பண்ணலாம்'' என்று சொல்லிற்று. இவ்விதம் சொல்லப்பட்டதைக் கேட்ட அவர்கள் மீண்டும் புத்ரனுடைய தலையை மடியில் வைத்துக்கொண்டு அழத் தொடங்கினார்கள்.

''தவமுள்ளவர்களும் தனமுள்ளவர்களும் பெரிய புத்தியுள்ளவர்களுமாகிய எல்லோரும் ம்ருத்யுவின் வசத்தை அடைகிறார்கள். இந்தக் குழந்தை திரும்பவும் பிழைப்பது எப்போது? நரியின் வசனத்தைக் கேட்டு குழந்தை மறுபடியும் உயிரை அடைய மாட்டாது. விதியின் வசத்தால் சரீரத்தை விட்ட ஜீவனுக்கு மறுபடியும் அந்த சரீரம் கிடைக்காது. இந்த நரி போல் நூறு நரிகளாலும் நூறு வருடங்களானாலும் இறந்த குழந்தைக்கு உயிர் பெற்று தர முடியாது. ஒருகால் ருத்ரனாவது, ஸுப்ரஹ்மண்யராவது, ப்ரஹ்மாவாவது, விஷ்ணுவாவது இக்குழந்தையின் பொருட்டு வரமளிப்பாராகில் இக்குழந்தை உயிர் பெறக்கூடும்.. கண்ணீர் விடுவதாலும் பெருமூச்சு விடுவதாலும் நீண்ட அழுகையினாலும் இக்குழந்தை உயிர்பெறப் போவதில்லை. எவன் கண்களால் பார்க்கவில்லையோ, எவ்விதத்திலும் அசையவில்லையோ, அவன் நிலை முடிவு பெற்றதென்று நிச்சயமாயிருக்கும் பொழுது அழுது கொண்டு என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்று கழுகு கூறியது.

உடனே நரி, ''அந்தோ! சீ! கழுகின் வாக்யத்தால் புத்தியில்லாதவர் களைப் போலப் புத்ரனிடமுள்ள ஸ்நேஹத்தைத் தள்ளிவிட்டு, ஸ்நேஹ மற்றவர்களாக எப்படி போகிறீர்கள்? புத்ர சோகத்தால் எரிக்கப்பட்ட மானிடர்களே! இந்த பாலகனின் நாசத்தால் ஸுகத்தையடையுவே மாட்டீர்கள். புத்ர சோகத்தால் மிகவும் தபிக்கப்பட்ட நீங்கள் இப்பொழுது இறப்பதே மேல். ஸுகம் வரலாமென்று நினைத்துத் தாமாகவே ஸுகத்தை கற்பனையாக கருதிக் கொண்டு அல்ப புத்தியுள்ளவர்களைப் போல் இவனை தள்ளிவிட்டு இப்பொழுது எங்கே போகப்போகிறீர்கள்?''என்று சொல்லிற்று. இவ்வாறு தர்மத்திற்கு விரோதமான தன்னுடைய லாபத்திற்காக பொய்யான ப்ரியத்தைச் சொல்லுவதும் மயானத்தில் வஸிப்பதும் எப்பொழுதும் ராத்ரியை தேடுவதுமான நரியினால் அமிர்தத்திற்கு ஒப்பான வசனங்களால் அவ்விடத்தில் தடுக்கப்பட்ட பந்து ஜனங்கள் உடனே நடுவிலிருக்கும் நிலைமையை அடையும்படி செய்யப்பட்டார்கள்.

பிறகு கழுகு கூறியது, 'இந்த அரண்ய ப்ரதேசமானது ப்ரேதங்களால் சூழப்பட்டதும் யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் அடையப்பட்டதும் க்ரூரமான கோட்டான்களால் சப்திக்கப்பட்டதும் பயங்கரமும் மிக்க கோபமும் கறுத்த மேகம் போல் நிறமுள்ளதுமாயிருக்கிறது. இதில் பிணத்தைப் போட்டுவிட்டுப் ப்ரேத கர்மாக்களைச் செய்யுங்கள். நரியின் வார்த்தையை விடுங்கள். பயனற்றனவும், பொய்யுமான நரியின் வார்த்தைகளைப் புத்தியிழந்து கேட்பீர்களானால் அப்பொழுது நாசமடைவீர்கள்'' என்று சொல்லிற்று.

பீஷ்மர் கூறினார். "அரசே! நரியானது இரவு வரும் வரை அவர்களை காக்கச் சொன்னது. ஸூர்யன் மறைந்தால் கழுகு வராது. நரி மட்டுமே அந்த சரீரத்தை புசிக்கும். பகலில் தான் கழுகால் அந்த ப்ரேதத்தைத் தின்ன முடியும். ஆகையால், பசியுடன் கூடிய கழுகும் நரியும் இறந்தவனைச் சேர்ந்த ஜனங்களை இவ்விதம் சொல்லின. அறிவில் ஸாமர்த்தியமுள்ள அந்த ம்ருக பக்ஷிகளின் அமிர்தம் போன்ற வசனங்களால் ஜனங்கள் இருக்கவும் போகவும் செய்தார்கள்.

அப்படிப்பட்ட ஜனங்களுக்கு மத்தியில், ஸ்ரீ சங்கர பகவான், ஸ்ரீ பார்வதி தேவியால் தூண்டப்பட்டு அங்கு காட்சி தந்தார். துக்கமுள்ள அந்த ஜனங்கள் வணங்கி நின்று கொண்டு "ஒரே புத்ரனாயிருப்பவனை இழந்தவர்களும் அவனை ஜீவிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்களுமான எங்கள் அனைவருக்கும், புத்ரனுக்கு ஜீவனை கொடுப்பதன் மூலம் வாழ்வை அளிக்க வேண்டும்" என்று கேட்டார்கள். கருணா பூர்ணரான அந்த பகவானும், புத்ரனுக்கு நூறு வருடம் ஆயுளையும் அளித்தார். அப்படியே எல்லா ப்ராணிகளுக்கும் ஹிதத்தைச் செய்பவரான அந்த பகவான் கழுகுக்கும் நரிக்கும் பசியைப் போக்குவதான வரமளித்தார். தீனர்களாய் அழுதுகொண்டிருப்பவர்களுக்குக் கண்ணீரானது துடைக்கப்பட்டது. சிறிய காலத்தில் நிச்சயத்துடன் தேடியதால் சங்கரரிடமிருந்து அனுக்ரஹம் பெற்று ஸுகமடைந்தார்கள். பிறகு சந்தோஷத்துடன் அந்த இடத்தைவிட்டு குழந்தையுடன் அந்த ஜனங்கள் ஆச்சர்யத்துடன் கூடினவர்களாய் நகரத்திற்குச் சென்றார்கள். இவ்வாறு பீஷ்மர் இறந்தவன் உயிர் மீண்ட கதையை தர்மபுத்திரருக்குச் சொன்னார். □

---

குருவானவர் மஹிமை வாய்ந்த கங்கா நதிக்குச் சமானமாகிறார். அந்நதியில் ஜனங்கள் குப்பை கூளங்களையும் அசுத்தங்களையும் எறிந்த போதிலும் அதன் பவித்ரம் ஒரு போதும் குறைவதில்லை. அது போல் நிந்தனைகளாலும், வசைகளாலும் குரு பாதிக்கப்படுவதில்லை.

**- பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணரின்**
**உபதேசங்களிலிருந்து**

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 7

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
**A. சுந்தரேச ஸர்மா வாஜபேயாயாஜி**

## ஆயில்யம்

ஸர்ப்பங்களை தேவதையாகக் கொண்ட நக்ஷத்திரம் ஆயில்யம். இது, ஆகாயத்தில் நான்கு நக்ஷத்ரங்களால் அம்மி போன்று ரூபம் காட்டப்படுகின்றது. சித்திரை மாதம் 14-ந் தேதி முதல் 26-ந் தேதி முடிய மாலை 6 மணிக்கு, தலைக்கு நேராகக் காணலாம் என வான ஸாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள்.

ஆயில்ய நக்ஷத்ரக்காரர்கள் அழுத்தமானவர்கள் என்பது மிகவும் பொருத்தம். குளிர்ந்த மனம் படைத்தவர்கள். இவர்களது எண்ணத்தை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. எந்த ஒரு நிலைமைக்கும் தக்கவாறு வளைந்து கொடுப்பார்கள். உயர்ந்த ஸ்தானத்தில் இவர்கள் இருப்பார்கள். உயர் அதிகாரிகள் விரும்பும் வகையில் நடந்து கொள்ளும் மனப்பான்மை கொண்டவர்கள்.

பயந்த ஸ்வபாவம் இவர்களிடம் பிறந்தது. தன்னை எதிர்க்கிறார்கள் என்று தெரிந்தால் அவர்களை நெருங்கவே மாட்டார்கள். ஆயில்ய நக்ஷத்திரம் என்ற உடனே தோஷம் உள்ள நக்ஷத்திரம் என்று ஜாதக பொருத்தங்களில் விலக்க வேண்டியதில்லை. அந்த நக்ஷத்ர ஜனன சாந்தி செய்துவிடுவதால் தோஷம் பரிஹ்ருதமாகிவிடும். ஆயில்ய நக்ஷத்திர தேவதையின் ஸ்வரூபம் சிவந்த நிறம், மூன்று கண்கள், பீதாம்பரதாரி. இருகைகளிலும் பழங்களை வைத்துக்கொண்டிருப்பவர். யவை என்னும் தானியத்தை வறுத்து, பொடி பண்ணி, நெய் கலந்த த்ரவ்யம் ''கரம்பம்'' எனப்படுவது. இதுதான் ஆயில்ய நக்ஷத்ர யாகத்திற்கு ஹவிஸ்ஸாக சொல்லப்பட்டுள்ளது.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டை ஏற்பட்டபோது அசுரர்களை ஜயிக்க, மேற்படி ''கரம்பம்'' என்ற த்ரவ்யத்தைக் கொண்டு ஆயில்ய நக்ஷத்ரத்தில் யாகத்தைச் செய்து அஸுரர்களை ஜயித்தார்கள் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆயில்ய நக்ஷத்ர யாக மந்த்ரத்தில், "ஸர்ப்பங்களுக்கு மிகவும் ப்ரியமான கரம்பம் என்ற இந்த ஹவிஸ்ஸை யாகம் செய்கிறேன். ப்ருதிவீ, அந்தரிக்ஷம், த்யுலோகம் ஆகிய மூன்று லோகங்களிலும் உள்ள அனைத்து ஸர்ப்பங்களுக்கும் இனிப்பான ஹவிர்பாகம் அளிக்கிறேன். அவைகள் ஸந்தோஷத்தை அடைந்து இங்கு யாக ஸ்தலத்தில் ஸான்னித்யத்தை அடைந்து ஆஸ்லேஷா நக்ஷத்ரங்களுடன் ஹவிர்பாகத்தைப் பெற்று அனுக்ரஹிக்கட்டும்" என்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

ஆயில்ய நக்ஷத்ரகாரர்களது சேர்க்கையால் சத்ருக்களையும், எந்த நிலைமையிலும் சமாளிக்கும் திறமையையும் நாம் அடையலாம். இவர்கள் படிப்பில் முனைந்து இறங்கினால், நல்ல படிப்பாளிகளாக விளங்குவார்கள். இவர்கள் மஹா விஷ்ணுவை உபாஸிப்பதால் மிகவும் நன்மைகளை அடைவார்கள். ராகு காலம் என்பது இவர்களுக்கு அனுகூலமாக இருப்பதாக சிலர் கூறுவார்கள்.

*"நமோSஸ்து ஸர்பேப்ய:"*

---

நடுக்கடலில் செல்லும் கப்பலின் பாய் மரத்தின் உச்சியில் உட்கார்ந்திருக்கும் பக்ஷி, அலுத்துப் போய், வேறோரிடம் தேடுவதற்காகத் தனது ஸ்தானத்திலிருந்து நெடுந்தூரம் பறந்து சென்று பார்த்து ஓரிடமும் காணாமல் களைத்துத் திரும்பவும் முன் ஸ்தானத்துக்கே வருகின்றது. அது போல, சாதாரண பக்தன் ஒருவன் அனுபவம் முதிர்ந்த தன்னுடைய ஸத்குருவினுடைய உபதேசங்களின்படி நடப்பதில் அலுப்படைந்தவனாய், நம்பிக்கையும், குருவினிடம் பக்தியும் இழந்து, தன்னுடைய முயற்சியினாலேயே ஈஸ்வரனை அடையலாம் என்று வெளிப் புறப்பட்டு போவானாயின், ப்ரயத்தனம் முற்றுப்பெறாமல் திரும்பவும் அவன் தன் குருவினுடைய அருளையும் ஆசீர்வாதத்தையும் எதிர்பார்த்து அவரிடமே வருவது நிச்சயம்.

**- பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் உபதேசங்களிலிருந்து**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள்

*கேள்வி : மதம் என்ற சொல்லிற்கு பொருள் யாது?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : கொள்கை என்பது பொருள்.

*கேள்வி : ருஷி என்பதற்கு பொருள் யாது?*

பதில் : ஞானக் கண்களால் காணும் ஆற்றல் வாய்ந்தவர்கள் ருஷிகள் என்று அழைக்கப்படுவார்கள். ஆகவே தான், ''ருஷி: பச்யதோ பவதி'' என்று கூறுவது வழக்கமாயிற்று.

*கேள்வி : தேவலோகத்தில் வாஸம் செய்பவர்கள்தான் தேவர்களா?*

பதில் : தேவர்கள் என்பவர்கள் எல்லோருமே தேவ லோகத்தில் தான் வாஸம் செய்கிறார்கள் என்பது தவறாகும். சில தேவதைகள் ஸுவர் லோகத்திலும், சிலர் புவர் லோகத்திலும், சிலர் பூலோகத்திலும் மற்றும் சிலர் மூன்று லோகங்களிலுமே வஸிப்பார்கள்.

*கேள்வி : தேவர்களால் மனித குலத்திற்கு நன்மை ஏற்படுமா?*

பதில் : அக்னி, வாயு, இந்திரன், வருணன் முதலியோர்களும் தேவர்களே. அக்னியை உபாஸிப்பதன் மூலம் செல்வம், கீர்த்தி, புஷ்டி, நன்மக்கள் போன்றவைகள் ஏற்படும்.

*கேள்வி : மந்திரங்களுக்கு ஸ்வரம் தான் முக்கியம், தவறுதலாக உச்சரித்தால் விபரீத பலன் ஏற்படும் என்று கூறுவது உண்மையா?*

மந்திரங்களை ஸ்வரங்கள் மாறிச் சொல்வதும், அக்ஷரங்களை மாற்றிச் சொல்வதும் தவறுகளாகும். இவற்றினால் விபரீத பலன்கள் ஏற்பட வாய்ப்புண்டு. த்வஷ்டா என்பவர் இந்திரனைக் கொல்ல ஒரு மகன் பிறக்கவேண்டும் என்று ஒரு யாகம் செய்தார். ப்ரதான ஹோமம் செய்யும் பொழுது, ''இந்த்ர ஶத்ரு வ்ருத்தஸ்வ'' என்றார்.

''இந்த்ர ஶத்ரு என்ற பதத்தில் 'ரு' என்பதை உயர்த்தியும், இ,ர,ச, இவற்றைத் தாழ்த்தியும் ஒலித்தால், அதற்கு இந்திரனைக் கொல்பவன் என்று பொருள்படும்.

'இ' என்பதனையே உயர்த்திப் பின்வருவனவற்றை அதற்குத் தக்கவாறே ஒலித்தால், அதற்கு இந்திரனால் கொல்லப்படுபவன் என்று பொருள் ஆகிவிடும். யாகம் செய்யும் த்வஷ்டா, அவசரத்தில் மாற்றிச் சொன்னார். அவர் இந்திரனைக் கொல்ல புத்ரன் வேண்டி யாகம் செய்ய, இந்திரனால் கொல்லப்படக் கூடிய புத்ரன் பிறந்தான் என்பதாக உள்ளது.

*கேள்வி : வானப்ரஸ்த நிலை எதற்கு?*

பதில் : ஒருவனுக்கு தீவ்ரமான வைராக்யம் ஸித்தித்த பிறகே ஸந்யாஸம் மேற்கொள்வது சிறந்தது. ஸந்யாஸம் எடுத்துக் கொண்ட பிறகு பாவங்கள் செய்தால் அவற்றிற்குக் கடுமையான தண்டனைகள் உண்டு. மனைவி மக்களுடன் இது நாள் வரை வாழ்ந்து வந்தவர்களால் திடும் என்று பந்த பாசங்களை உதறிவிடுவது சிரமமாக இருக்கும். ஆகவே, வானப்ரஸ்த நிலையில், ஸந்யாஸம் வாங்கிக் கொள்ளாமல், ஆனால், ஸந்யாஸி போல, பழகிக் கொள்ளவேண்டும். பழக்கத்தினால் மனம் தீவ்ரமான வைராக்யத்தை அடைந்த பிறகே ஸந்யாஸம் மேற்கொள்ள வேண்டும். இதற்காகத்தான் இடையில் வானப்ரஸ்தம் இருக்கிறது. ஆஸ்ரமங்களில் மேல் நோக்கி செல்லலாமே ஒழிய, கீழ் நோக்கி வரலாகாது.

*கேள்வி : வானப்ரஸ்தர், தன் மனைவியோடு வஸிக்கலாகுமா?*

பதில் : பத்தினியுடன் வாஸம் செய்வதில் தவறில்லை. அவள் வானப்ரஸ்த ஆஸ்ரமத்திற்கு உடன் வர சம்மதிக்காவிடில் தனித்து வரவேண்டும். பத்தினியுடன் வாழ்ந்த போதிலும், மனதைத் தவத்திலேயே நிறுத்த வேண்டும்.

---

இன்று நமக்குயிருக்கும் சிரம தசையில், ஏற்கனவே இருக்கும் கோவில்களை நாம் பராமரித்தாலே போதும். புதிய கோவில்கள் கட்டத் தேவையில்லாத அளவில், வேண்டுமான அளவிற்கு, நிறையவே நம் நாட்டில் கோவில்கள் உள்ளன. ஆனாலும் நாம் புதிய கோவில்களைக் கட்டுவதால், கோவில்களைக் கட்டும் கலை - தேர் செய்யும் கலை - ஆகம சாஸ்திரங்கள் போன்ற கலைகள் அழியாமல் காப்பாற்றப்படுகின்றன. இல்லையென்றால், இந்தக் கலைகள் அழிந்து விடும். பிறகு, பழைய கோவில்களைப் பழுது பார்ப்பது கூடக் கஷ்டம். அதற்காகவே புதிய கோவில்களைக் கட்டுவதும் அவசியமாக உள்ளது.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# வேத கதைகள் - 8

- தர்மக்ஞர், வான்முகஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள்

க்ருஷ்ண யஜுர்வேதம் கடசாகையில் 2வது ப்ரபாடத்தில் நசிகேத உபாக்யானம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

வாஜஶ்ரவஸ் என்பவர் விஶ்வதத் என்ற ஒரு யாகம் செய்தார். அந்த யாகத்தில், தன்னிடமுள்ள சொத்துக்கள் யாவற்றையும் ரித்விக்துக்களுக்கு தக்ஷிணையாகக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆதலால், அந்த யாகத்திற்கு ஸர்வ வேதஸம் என்று மற்றொரு பெயர் உண்டு.

ஸர்வ வேதஸம் என்றால் யாவற்றையும் தக்ஷிணையாகக் கொண்டது என்று பொருள். இந்த யாகத்தை, திலீபன் என்ற அரசனின் பிள்ளை ''ரகு'' என்ற அரசன் செய்ததாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது. காளிதாஸனும், *'ரகுவம்சம்'* என்ற காவியத்தில் இதைப்பற்றி விரிவாகக் கூறியிருக்கிறார். அந்த அரசன், தன்னிடமுள்ள யாவற்றையும் தக்ஷிணையாக அளித்து, மண் பாத்திரத்தைக் கொண்டு அனுஷ்டானம் செய்து வந்தான் என்று கூறியிருக்கிறது.

இந்த வாஜஶ்ரவஸ் என்பவரும், இது போல், தன்னிடமுள்ள பொருள்களை எல்லாம் தக்ஷிணையாக அளித்து இந்த யாகம் செய்தார். அவருக்கு நசிகேதஸ் என்ற ஒரு பிள்ளை இருந்தான். வாஜஶ்ரவஸிடம் உபயோகம் அளிக்காத மாடுகள் தான் சொத்தாக இருந்தன. அந்த மாடுகள் நிறைய நீர் அருந்தியிருந்தன. அது போல், அதிகமான புற்களையும் கடித்து மென்றிருந்தன. பால் நிறைய கறந்திருந்தன. தற்சமயம் காம்பில் கை வைத்தால் ரத்தம் தான் வரும்.

இப்படிப்பட்ட பசுக்கள் தான் அவரிடம் இருந்தன. அவைகளைத் தக்ஷிணையாக அளித்து அவர் யாகம் செய்வதைக் கண்ட நசிகேதஸ் ''தக்ஷிணையாக இந்த மாடுகளைப் பெற்றுக் கொள்கிற ரித் விக்குகளுக்கு இந்த மாடுகளால் எந்த வித உபயோகமும் இல்லை. தானும் தன் தந்தையின் சொத்தில் சேர்ந்தவன். ஆதலால் தன்னை யாருக்காவது தக்ஷிணையாக தந்தை அளித்தால், தான் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யலாம் என்று மனதில் எண்ணி தந்தையிடம் தெரிவிக்கலானான்.

''என்னை யாருக்கு அளிக்கப் போகிறீர்கள்'' என்று நசிகேதஸ் கேட்டான். தந்தையும், நசிகேதஸ் சிறுபிள்ளையாதலால் புரியாமல் பேசுகிறான் என்றெண்ணி மௌனமாக இருந்தார். இதையே பல தடவை நசிகேதஸ் வற்புறுத்திக் கேட்க, கோபமடைந்த அவர், ''உன்னை யமனுக்கு அளிப்பேன்'' என்ற நசிகேதஸிடம் கூறினார்.

இதைக் கேட்டவுடன் அவன் தனிமையில் பின்வருமாறு ஆலோசித்தான்.

''ஸாஸ்த்ரங்கள், பிள்ளைகளை மூன்று விதமாக பிரித்துள்ளன. எந்த மகன், தந்தை ஒன்றும் சொல்லாமலேயே தந்தையின் மனதில் என்ன இருக்கிறது என்று அறிந்து கொண்டு அதன்படி நடக்கிறானோ அவன் உத்தம புத்திரன். தந்தை சொன்னவுடன் முகம் கோணாமல் எவன் அப்படி நடக்கிறானோ அவன் மத்திம புத்திரன். தந்தை சொன்னவுடன் தந்தையை கோபித்துக் கொண்டு பிறகு அதை எவன் செய்கிறானோ அவன் அதம புத்திரன். தந்தை சொல்படி கேட்காதவன் மகனாகவே ஆக மாட்டான்.

இவ்விதம் இருக்கும் பொழுது நான் எப்பொழுதும் உத்தம புத்திரனாகவே இருப்பேன், அல்லது மத்திம புத்தரனாகவாவது நிஶ்சயம் இருப்பேன். ஒருக்காலும் அதம புத்திரனாக இருக்கவே மாட்டேன். இப்படி இருக்கும் பொழுது, எந்த காரணத்தால் என் தந்தை என்னை யமனுக்கு அனுப்புவதாகக் கூறினார்'' என்று ஆலோசித்து, எப்படியிருந்தாலும், தந்தை சொல் பொய்யாகக் கூடாது என்று தீர்மானித்து தந்தையிடம் வந்தான்.

''தந்தையே, என்னை யமனிடம் அனுப்புவீராக'' என்று வேண்டினான். தந்தையும், கோபத்தில் மகனை இவ்விதம் கூறிவிட்டார். பிறகு அவரும், ப்ரியமான பிள்ளையை இவ்விதம் கூறி விட்டேனே என்று வருந்தினார். இவ்வாறு வருந்தி, ஸத்ய ஸந்தனான அவர் பிள்ளையை யம லோகம் அனுப்பினார்.

அவ்வாறு அனுப்பும்பொழுது, 'ஓ மகனே! நீ யம லோகத்தில், யமன் இல்லாமல் வேறு இடம் சென்றிருக்கும் பொழுது யம லோகம் செல். அங்கு யமனைச் சார்ந்தவர்கள் உனக்கு உணவளித்தால் உண்ணாதே. ஒரு இல்வாழ்க்கை நடத்துபவன் வீட்டில் வேதம் ஓதிய அந்தணன் விருந்தாளியாக வந்து உண்ணாமல் இருந்தால் அதனால் வீட்டு எஜமானனுக்கு பல துன்பங்கள் ஏற்படும் என்று ஸாஸ்த்ரங்களில் கூறியிருக்கிறது.

ஒரு நாள் உண்ணாமல் இருந்தால், வீட்டுத் தலைவனுடைய பிள்ளைகளை அழித்து விடுகிறான். இரண்டாவது நாள் உண்ணாமல் இருந்தால் தலைவனின் பசுக்களை அழிக்கிறான். மூன்றாவது நாள் உண்ணாமல் இருந்தால் அந்த தலைவனின் புண்ணியங்கள் யாவற்றையும் அழித்துவிடுகிறான். ஆதலால், நீ யம லோகம் சென்று யமன் வரும் வரையில் பட்டினி கிடப்பாயாக என்ற உபதேசம் செய்து யமன் இல்லாத சமயத்தினை தெரிந்து கொண்டு தன் பிள்ளையை அனுப்பினான்.


நசிகேதஸும் தந்தை சொல்படியே யமன் இல்லாத சமயம் யம லோகம் சென்று, அவன் மனைவி, பிள்ளைகள் வற்புறுத்திய போதிலும் ஆகாரம் செய்யாமல் இருந்தான். மூன்று நாட்கள் சென்ற பிறகு தான் யமன் வந்தான். யமனுடைய மனைவி முதலானவர்கள் யமனிடம் இந்த வ்ருத்தாந்தங்களைத் தெரிவித்தனர்.

இதனால் வருந்திய யமன், ரிஷி குமாரனை அணுகி அவனை ஸாஸ்த்ரங்களில் கூறியபடி அர்க்யம், பாத்யம் முதலியவைகளால் நன்கு மரியாதை செய்து, ''நீ என் வீட்டில் மூன்று நாட்கள் உண்ணாமல் இருந்திருக்கின்றாய். அதனால் என் பிள்ளைகள், பசுக்கள், புண்ணியங்கள் எல்லாம் அழிந்துவிடும். இவைகள் அழியாமல் இருப்பதற்காக உனக்கு மூன்று வரங்களை அளிக்கிறேன். பெற்றுக் கொள்வாயாக'' என்று வேண்டினான்.

யமனாக இருந்தாலும் அந்த ரிஷி குமாரனிடம் வேண்டியதால் நசிகேதஸும் மகிழ்ந்தவனாக, ''நான் உயிருடன் இதே உடலுடன் என் தந்தையை அடைய வேண்டும் என்றும், யம லோகம் சென்று திரும்பியவன் என்று எண்ணி என்னை என் தந்தை தள்ளாமல் ஏற்றுக் கொள்ளவேண்டும்'' என்றும் முதல் வரத்தை வேண்டினான்.

இரண்டாவது வரத்தால், ''இஷ்டா பூத தர்மங்கள் செய்த பயன் எனக்குக் கிடைக்கவேண்டும்'' என்று வேண்டினான். ஔபாஸனம், அக்னிஹோத்ரம் செய்வது, தவம் புரிவது, உண்மை பேசுவது, வேதம் ஓதுவது இவைகள் இஷ்டம் எனப்படும். கிணறு வெட்டுவது, ஓடை, குளம் இவைகளை நிர்மாணிப்பது, கோவில்கள் கட்டுவது, அன்னமளிப்பது, தோட்டம் அமைப்பது முதலியவை பூத தர்மங்கள் எனப்படும்.

இவ்விதம், இஷ்டாபூத தர்மங்களை ஒருவன் செய்வதால் அவனுக்கு என்ன பலன் கிடைக்குமோ அந்த பலன் தனக்குக் கிடைக்க வேண்டும் என்று வேண்டினான்.



மேலும், சயனம் என்ற ஒரு உயர்ந்த கர்மாவை அவனுக்கு உபதேஸித்தான், யமன். அந்த உயர்ந்த கர்மாவிற்கு *"நாசிகேத சயனம்"* என்ற பெயர் ஏற்பட்டது. இந்த நாசிகேத சயனத்தை எவன் செய்கிறானோ, எவன் இதன் பெருமையை அறிந்து கொள்கின்றானோ, அவர்களுக்கும் இஷ்டா பூத தர்மத்தை அனுஷ்டித்த பலன் ஏற்படும். மூன்றாவது வரத்தால் மரணமற்ற நிலை ஏற்படுத்துமாறு வேண்டினான்.

மரணமற்ற நிலைக்குத்தான் அம்ருதத்வம் என்று பெயர். அம்ருதத்வம் என்றால் மோக்ஷம் என்றும் அர்த்தம். அந்த மோக்ஷமானது இந்த ஜீவன் தன் உண்மையை அறிந்து கொண்டால் தான் ஏற்படும். அப்படிப்பட்ட மோக்ஷத்திற்கு சாதனமான ப்ரஹ்ம வித்தையை நசிகேதஸுக்கு யமன் உபதேசம் செய்தான். இதனால் தத்வக்ஞானம் ஏற்பட்டு ஜீவன் முக்தராக நசிகேதஸ் பூலோகம் திரும்பி சுகர், வாமதேவர் முதலியோர்களைப் போல் பெரிய ஞானியாக விளங்கினான்.

ஆதி சங்கரர், இந்த வ்ருத்தாந்தத்தையே கொஞ்சம் மாற்றிக் கூறும் கடோபநிஷத்திற்கு பாஷ்யம் செய்யும் பொழுது, ப்ரஹ்மவித்தைக்கு ஆசாரியனான வைவஸ்வதனுக்கும் சிஷ்யனான நசிகேதஸுக்கும் என் வணக்கமுரியது என்று கூறியுள்ளார். இதை


*"ஓம் நமோ பகவதே ப்ரஹ்ம வித்யாசார்யாய -*
*வைவஸ்வதாய நசிகேதஸே ச ॥*

என்று கூறுகிறார்.

---

*சிஷ்யனானவன் தனது குருவின் குண தோஷங்களைப் பரிசீலனை செய்யக்கூடாது. குருவின் வார்த்தைகளின்படி அவன் நடக்க வேண்டும். "எனது குரு, கள்ளுக் கடைக்குப் போகிறவரானாலும் அவர் எனக்குப் பவித்ரமான நித்யானந்தரே; எனது குரு, குடிகாரரும், பாபிகளும் கூடுமிடங்களுக்குப் போகிறவரானாலும் அவர் எனக்குக் குற்றமற்ற பவித்ர குருவாகவே இருக்கிறார்" என்பது வங்க தேசத்தில் வழங்கும் ஒரு பழமொழி.*

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**



# மணிமங்கலம் ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி

நம்முடைய மதுரபுரி ஆஸ்ரமம் அமைந்த கிராமத்திற்கு மாஹாண்யம் என்று பெயர். மஹா ஆரண்யம் என்பது மருவி மாஹாண்யம் என்று ஆகிவிட்டது. ஒரு காலத்தில் இது ஒரு அடர்ந்த காடாக இருந்திருப்பதாலேயே இந்த பெயர் வந்துள்ளது. மதுரபுரி ஆஸ்ரமத்திற்கு ஸமீபத்தில் உள்ளது மணிமங்கலம் என்ற க்ஷேத்ரம். காஞ்சிபுரத்தின் நுழை வாயிலாக அமைந்துள்ளது இந்த மணிமங்கலம்.

கிராமங்களில் மணி போன்றது என்ற பொருளிலும், வட மொழியில் ரத்தின கிராமம், ரத்தின கிருஹம் எனவும், கிராம சிகாமணி எனவும் மணிமங்கலத்திற்குப் பெயர்கள் வழங்கப்பட்டிருப்பதைக் கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிகின்றது. ஆனால், கி.பி. 7ம் நூற்றாண்டிலேயே, பல்லவர் காலத்திலேயே - மணிமங்கலம் என்ற பெயர் வழங்கப்பட்டிருப்பதை கூரம் செப்பேட்டின் மூலம் தெரிந்து கொள்ளமுடிகின்றது. இந்தக் கோயிலில் 18 கல்வெட்டுகள் உள்ளன.

இவை கி.பி. 10ம் நூற்றாண்டு முதல் கி.பி.16ம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தைச் சேர்ந்தவை. இந்தக் கல்வெட்டுகள் பெரும்பாலும் கோயிலுக்கு வழங்கப்பட்ட பல்வேறு தானங்களைப் பற்றியும் அவற்றைக்கொண்டு செய்யவேண்டிய வழிபாடுகள் பற்றியும் குறிப்பிடுகின்றன.

தமிழகத்தில், ஸ்ரீ க்ருஷ்ணபிரானுக்கென்று ப்ரத்யேகமாக சில கோயில்களே உள்ளன. ராஜமன்னார்குமடி, காட்டுமன்னார்கோயில், திருநெல்வேலியில் உள்ள மன்னார்கோயில் போன்றவைகளே அவைகள். அத்தகைய கோயில்களில் ஒன்றுதான் மணிமங்கலத்தில் உள்ள ராஜகோபால ஸ்வாமி திருக்கோயில். தேவ பாஷையில் ஸ்ரீ துவாரகாபுரி தேவன் அதாவது, துவாரகையின் அரசன் என்றும், இதையே தமிழில் வண்துவாராபதி என்றும், ஸ்ரீ காமகோடி விண்ணகர் ஆழ்வார் என்றும், திருவாய்க்குலம் (திரு ஆயர்குலத்துப் பெருமாள் என்பதன் மருவு) என்றும் இந்தக் கோயிலில் உள்ள பகவான் குறிப்பிடப்பட்டுள்ளார்.

'ஜெயம் கொண்ட சோழ ப்ரம்மாதி ராஜன்' என்ற இரண்டாம் ராஜேந்திரனின் (கி.பி.1055) படைத்தலைவரின் தாயாரான காமக்குவையாள், மணிமங்கலத்திலிருந்தும், அதன் அருகில் உள்ள அமண்பாக்கம் என்ற இடத்திலிருந்தும் 4,000 குழி நிலம் வாங்கி அதை இந்தக் கோயிலுக்குத் தானமாக அளித்துள்ளார். வீர ராஜேந்திரனின் (கி.பி.1068) ஐந்தாம் ஆட்சி ஆண்டில், இதே படைத்தலைவன் 4,450 குழிநிலம் இந்தக் கோயிலுக்கு தானமளித்துள்ளான். மணிமங்கலத்தி லிருந்து இந்த நிலத்தை இவனின் தந்தை மஞ்சிப்பய்யனார் என்னும் ஜெயசிம்ம குலாந்தக ப்ரம்மராயன் என்பவர் வாங்கியுள்ளார். இதன் மூலம் ஜெயசிம்ம குலாந்தக ப்ரம்மராயனும் ஒரு படைத்தலைவன் என்பதும், இவர்களது சொந்த ஊர் மணிமங்கலம் என்பதும் தெரிகின்றன.

மாதந்தோறும், அமாவாசை தினத்தன்று, இந்தக் கோயிலின் இறைவன் திருவுருவை ஊர்வலமாக எடுத்துச் செல்ல முதலாம் குலோத்துங்கனின் 48-வது (கி.பி.1118) ஆட்சி ஆண்டில் 1,050 குழி நிலத்திலிருந்து வரும் வருவாயைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வண்துவாராபதி கோயில் இறைவனாக திருவாயக் குலத்தாழ்வார் அவதரித்த நட்சத்திரமான ரோஹிணி நட்சத்திர நாள் அன்று திருமஞ்சன நீராட்டுக்கும் இறைவனுக்கு அமுதிற்கும், விக்கிரம சோழனின் 4-வது ஆட்சியாண்டில் நிலம் கொடையளிக்கப்பட்டுள்ளது. இதே மன்னனின் 15-ம் ஆட்சியாண்டில் வழங்கப்பட்ட 250 குழி நிலதானம் இரண்டாம் குலோத்துங்கனின் 8-வது ஆட்சியாண்டில் தானம் அளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ராஜராஜனின் (கி.பி. 1158) 8-வது ஆட்சி ஆண்டில் சிறுகாலை சந்திக்கும், திருப்போனகம் அமுது செய்தருளவும் நான்கு நாழி (நாழி என்பது ஓர் அளவு) அரிசி தானமாக அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1217) காலத்தில் நான்கு நாழி அரிசி, அமுது செய்ய 600 குழி நிலம் அளிக்கப்பட்டது. இதே மன்னனின் 28-வது ஆட்சியாண்டில் 'திருவாய்ப்பாடி' என்று அழைக்கப்பட்ட விளக்கு ஒன்று எரிக்கக் கொடை அளிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் இராஜராஜனின் (கி.பி. 1216) காலத்தில் இரவு சந்தி விளக்கெரிக்கப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

மணிமங்கலத்துடையான் பஞ்ச நதி லட்சுமணன் மலைக்கு இனிய நின்றான் பெரிய பிள்ளையும், இவன் தம்பி ஆகவமல்ல தேவன் ஆகிய இருவரும் இந்தக்கோயிலில் இருந்த அபிஷேக மண்டபத்திற்குக் கீழ்ப்பகுதி புலி முகத்துடன் கூடிய படிக்கற்களை அமைத்துள்ளனர். எனவே, அபிஷேக மண்டபம் கி.பி.13-ம் நூற்றாண்டிற்கு முன்பே இருந்துள்ளது எனத்தெரிகிறது. மற்றொரு கல்வெட்டில் மன்னார் என வழங்கப்பட்ட இறைவன் திருமுன்பும், இதே கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிங்கப்பெருமாள் (நரசிம்மர்) திருமுன்பும் திருவிளக்கு வைக்கப்பட்டுள்ள செய்தி காணப்படுகிறது. எனவே, இந்தக் கோயில் சோழ மன்னர் அனைவராலும் போற்றப்பட்டு, தானங்கள் பல வழங்கப்பட்டுள்ளமை தெரிகிறது.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் செங்காட்டுக் கோட்டத்து மாகனூர் நாட்டில் இருந்து வந்த மணிமங்கலம், பின்னர் ஜயம் கொண்ட சோழ மண்டலத்தில் புலியூர் கோட்டத்தில் ஸ்ரீ குன்றத்தூர் நாடு என்ற நிர்வாக அமைப்பின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. எனவே, இப்போது போலவே அப்போதும் நிர்வாக வசதிக்காக ஊர்களை ஒரு நாட்டுப் பிரிவிலிருந்து வேறு ஒன்றுக்கு மாற்றம் செய்துள்ளனர்.

மணிமங்கலம், சோழ மன்னன் முதலாம் இராஜராஜன் காலத்தில் அவனது மனைவியான உலக மாதேவியின் பெயரால் உலக மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்டுள்ளது. பின்னர், முதலாம் இராஜாதி ராஜன் காலத்தில் இராஜ சூளாமணிச் சதுர்வேதி மங்கலம் எனவும், கி.பி.11-ம் நூற்றாண்டில் 'பாண்டியனை இருமுடி வென்று கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலம்' எனவும் இவனது பாண்டிய வெற்றியைக்குறிக்கும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மூன்றாம் இராஜராஜன் காலத்தில் கிராம சிகாமணி சதுர்வேதி மங்கலம் எனவும் வழங்கப்பட்டது.

இத்தனை பெருமைகள் வாய்ந்தது மணிமங்கலம் ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி திருக்கோயில். □

---

உபதேசம் செய்து பலரைத் திருந்தச் செய்துவிட்டு, தான் ஒழுங்காக இல்லாமலிருப்பதைவிட, பலரைத் திருத்தா விட்டாலும் பரவாயில்லை, தான் ஒருவன் ஒழுங்காயிருப்பதே மேல் அல்லவா?

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**



# பாலகர்களுக்கு ஒரு கதை - 3

காசி க்ஷேத்ரமானது மிகவும் புனிதமானது. அந்த காசி நகருக்கு க்ஷேத்ராடனமாக பல லக்ஷ ஜனங்கள் பக்தி ச்ரத்தையுடன் வருகின்றார்கள். ''எவன் ஒருவன் காசிக்குச் சென்று விடுகிறானோ அவனுக்கு கைலாசம் தீர்மானமாகக் கிடைக்கிறது. காசியில் இறப்பவனுக்கு மறு பிறவி கிடையாது'' என்று பல புராணங்கள் சொல்கின்றன.

ஒரு நாள், சிவராத்திரி அன்று, காசி விச்வேஸ்வரனை பூஜை செய்வதற்காக பல பக்தர்கள் வருவதைப் பார்த்து பார்வதியானவள் பரமேச்வரனைப் பார்த்து, ''ஹே நாதா! எவர்கள் காசிக்குச் செல்கிறார்களோ அவர்கள் கைலாசத்திற்கு வருகிறார்கள் என்று ஜனங்களால் சொல்லப்படுகிறதே! இந்த பக்தர்கள் கைலாசத்தை அடைவார்களா?'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட பரமேச்வரன், ''இல்லை, இல்லை'' என்று கூறி விட்டு இந்த காசி யாத்ரீகர்கள் கைலாசத்திற்கு வருபவர்கள் அல்ல. இவர்களில் யார் கைலாசத்திற்கு வருவார்கள் என்பதை நான் காண்பிக்கிறேன் பார் என்று சொன்னார். உடனே பார்வதி பரமேச்வரர்கள் வயதான தம்பதிகளாக மாறினார்கள். இருவர்களும் காசி க்ஷேத்திரத்தில் விச்வநாதருடைய ஆலயத்தின் நுழை வாயிலருகில் தோன்றினார்கள்.

அமர்ந்திருக்கும் பார்வதியினுடைய மடியில் வயதான பரமேச்வரன் படுத்துக்கொண்டு மூர்ச்சையாக இருந்தார். அப்பொழுது ஆலயத்தை நோக்கிச் செல்லும் பக்தர்களைப் பார்த்து பார்வதியானவள், ''ஹே மஹா ஜனங்களே! ஹே பக்தர்களே! என்னுடைய கணவனானவன் தாகத்தினால் பீடிக்கப்பட்டவனாக, மயக்கமாக, சலனமில்லாமல் கீழே விழுந்துவிட்டார். கருணையோடு என் கணவனுக்கு கொஞ்சம் கங்கா ஜலம் கொடுங்கள்'' என்று கேட்டார். எனது கணவன் மூச்சு நிற்கும் தருவாயில் மயக்கமாக இருக்கிறார், ஆதலால் இவரை விட்டு நான் சென்று ஜலம் எடுத்து வர முடியாத நிலையில் இருக்கிறேன். யாராவது கொஞ்சம் ஜலம் கொடுங்கள், என் கணவனை உயிர் பிழைக்கச் செய்யுங்கள் எனக்கு உபகாரம் பண்ணுங்கள் என்று வேண்டிக் கொண்டாள்.

ஆலயத்தை நோக்கிச் செல்லும் பக்தர்கள் கங்கா நதியில் குளித்து விட்டு கையில் உள்ள பாத்திரங்களில் கங்கா ஜலத்தை எடுத்துக்கொண்டு ஆலயத்தை நோக்கி சென்று கொண்டிருந்தனர். இந்த வயதானவள் சொல்லும் வார்த்தையைக் கேட்டு, இது என்னது, விஶ்வநாதரைப் பார்ப்பதற்காகச் செல்லும் நமக்கு தரித்ர தேவதா தரிசனம் என்று சொல்லிக் கொண்டும், முணுமுணுத்துக் கொண்டும், கிழவியைப் பரிகாசம் செய்துகொண்டும் சென்றார்கள்.

சில பேரோ, நான் கோவிலுக்குச் சென்று வரும் வரை இங்கேயே இருங்கள். பிறகு வந்து தங்களுக்கு உபகாரம் செய்கிறேன் என்று சொன்னார்கள். அவர்களுள் ஒருவர்கூட இந்த கிழவியின் அவல நிலையைக் கவனித்து உபகாரம் செய்ய முன் வரவில்லை. அத்தருணத்தில் அங்கு ஒரு திருடன் வந்தான். கோவில் நுழை வாயிலில் ஜனங்களின் நெருக்கம் அதிகமாக இருந்தது. இப்பொழுது பெண்களின் கழுத்திலுள்ள சங்கிலியையும் புருஷர்களின் பணப்பையையும் திருடுவதற்கு இதுதான் தக்க சமயம் என நினைத்துக்கொண்டு வந்த திருடனின் காதில் இந்த கிழவியின் புலம்பல் கேட்டது. திருடன் உடனே, ''ஹே தாயே! நீ யார்? இங்கு எதற்கு வந்திருக்கிறாய்? உனது கஷ்டம் என்ன?'' என்று கேட்டான்.

உடனே வயதானவள், ''இவர் என் கணவர், நாங்கள் இருவரும் விஶ்வேஸ்வரனின் தரிசனத்திற்காக வந்துகொண்டிருந்தோம். கோவிலை அடையும் தருவாயில் எனது கணவன் பசியினாலும், தாகத்தினாலும் மூர்ச்சையாகிவிட்டார். யாராவது ஒருவர் கொஞ்சம் ஜலம் கொடுத்தார்களானால் இவர் பிழைத்துக் கொள்வார். இங்கு செல்பவர்களை அடிக்கடி தண்ணீர் கேட்பவளாக நான் இருக்கிறேன்'' என்று கிழவி சொன்னாள்.

உடனே அந்த திருடனானவன் தன் மடியில் வைத்துக் கொண்டுள்ள தண்ணீரை எடுத்து கொடுப்பதற்கு முயன்றான். அப்பொழுது அந்த கிழவியானவள் அவனைப்பார்த்து, ஹே நண்பனே! ஒரு நிமிஷம் நில். எப்பொழுது என் கணவனின் மூச்சு நிற்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால், தண்ணீர் கொடுப்பதற்கு முன் இன்று வரை உன்னால் செய்யப்பட்ட புண்ணிய காரியங்களைக் கூறுவாய். இது என் விருப்பம். நீ பொய் சொல்லாமல் உண்மையைச் சொல்ல வேண்டும். நீ பொய் சொன்னால் எனது கணவன் உனது தண்ணீரைப் பெற்றுக் கொண்டவுடன் இறந்து விடுவார். நீ சொல்லும் உண்மையைக் கேட்ட பிறகு இவருக்கு நீ தண்ணீர் அளிக்க அனுமதி தருகிறேன் என்று சொன்னாள்.

திருடன் அதற்கு ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தான். சற்று நேரம் கழித்து பேசத் தொடங்கினான். அம்மா, இன்று வரை நான் ஒரு நல்ல காரியம் கூட செய்யவில்லை. இப்பொழுது இந்த வயதானவருக்கு தண்ணீர் கொடுக்க நினைத்தேனே அது ஒன்று தான் என் வாழ்க்கையில் நான் செய்த புண்ணிய காரியம். சத்தியத்தைக் கூறியுள்ளேன். உங்களது கணவனுக்கு இந்த தண்ணீரைக் கொடுங்கள் என்று வேண்டிக் கொண்டு தண்ணீர் பாத்திரத்தைக் கிழவியிடம் கொடுத்தான்.

மறுகணமே அந்த பார்வதி பரமேஶ்வரர் தன்னுடைய சுய ரூபத்தை எடுத்துக் கொண்டு திருடனுக்கு தரிசனம் தந்தார்கள். அவர்கள் திருடனை நோக்கி, இந்த மனித ஜன்மா பிறருக்கு உபகாரம் செய்வதற்காகவே ஏற்பட்டது. தன் வாழ்க்கைக்காக ஏற்பட்டது இல்லை. நீ இன்று வரை பல துஷ்ட காரியங்கள் செய்திருந்தாலும் இப்பொழுது ஒரு ஜீவன் பிழைப்பதற்காக உண்மையைச் சொல்லியுள்ளாய். உபகாரம் செய்துள்ளாய், இன்று முதல் நீ சுத்தனாக இருந்து உனது வாழ்க்கையைப் பிறருக்கு உபகாரம் செய்பவனாக நடத்துவாய். சத்தியத்திற்கு மேல் தர்மம் கிடையாது. பிறருக்கு உதவி செய்வதைக் காட்டிலும் கடவுளுக்கு பூஜை செய்வது உயர்ந்ததாக ஆகாது. பிறருக்குத் தக்க சமயத்தில் உபகாரம் செய்துவிட்டு கடவுள் பூஜை செய்ய வேண்டும் என்று சொல்லி அனுக்ரஹம் செய்துவிட்டு மறைந்தார்கள்.

பிறகு கைலாசத்தில் பார்வதியைப் பார்த்து பரமேஶ்வரன், "இப்பொழுது யார் உண்மையான பக்தன், யார் கைலாசத்திற்கு வரக் கூடியவன் என்பதை அறிந்தாயா?" என்று கேட்டார். ஆகையால், இந்த பிறவியானது பிறர் உபகாரத்திற்காக ஏற்பட்டதால் கூடிய வரையில் பிறருக்கு உபகாரம் செய்வோமாக.

**- T. கண்ணன் தீக்ஷிதர்**

---

*நம்முடைய மஹான்களுக்கு திவ்ய திருஷ்டி உண்டு என்பதற்கு, நம்முடைய வானியல் சாஸ்திரமே பிரமாணம். எந்தவிதமான கருவிகளுமில்லாமல், தங்களுடைய தியான சக்தியால் அவர்கள் சொன்ன ஒவ்வொரு விஷயமும், இன்று விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்டு வருகிறது. அத்தகைய மஹான்கள் கொடுத்தது தான் சாஸ்திரங்கள்.*

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 29

*"குற்றமுற்று அறுத்தெனைக் குணமாய்ப் பணித்தருள்
குருவுருவாயொளிர் அருணாசலா"* 19

குரு இல்லாமல் பகவானை அடைய முடியாது என்பதை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி சொல்லி வருகின்றோம். ஸாதகர்கள் மூன்று வகைப் படுவார்கள். ஒரு ஸாரார், பகவானையே நேரிடையாக பக்தி செய்பவர்கள். இரண்டாவது ஸாரர், ஒரு குருவை அடைந்து அவரின் அருளினால் பகவானைப் பார்க்க விழைபவர்கள். மூன்றாவது ஸாரர்கள், குருவிடமே அனன்ய பக்தி செய்து, தெய்வமே வேண்டாம்; குருவே போதும் என்று இருப்பவர்கள். பகவானை மட்டும் பக்தி செய்பவர்கள் ஸாமான்யமான அதிகாரிகளாக இருந்தால், அவர்கள் செய்யும் தெய்வ பக்தியே அவர்களை ஒரு உத்தம குருவிடம் கொண்டுவிடும்.

உத்தம அதிகாரிகள் - பகவான் ரமண மஹரிஷி போன்ற அவதார புருஷர்களே - குரு இல்லாமல் தெய்வத்திடம் நேரிடையாகச் செல்ல முடியும். அது போலவே, நம் பகவானும் நேரிடையாக அருணாசலத்திடம் வந்தவர். இப்படி சொல்வதைக் காட்டிலும், நேரிடையாகவே அருணாசலேஸ்வரரால் ஆட்கொள்ளப்பட்டவர் என்று சொல்வதுதான் சாலப் பொருந்தும். அது போல், திருப்புகழ் அருளிய அருணகிரிநாதரும் நேரிடையாக முருகப் பெருமானிடம் ஈடுபாடு கொண்டவர்.

ஆனால், இப்படி தெய்வத்தால் நேரிடையாக தடுத்தாட்கொள்ளப் பட்ட இவர்களோ, இறைவனை குருவாகவே பாவிக்கின்றார்கள். உத்தம குருவை அடைந்து அவரிடம் பக்தி செய்யும் அநேகருக்கு அந்த குருவே போதும். தெய்வம் வேண்டாம் என்றாகிவிட்டது. ஆனால், நேரிடையாக தெய்வத்தால் தடுத்தாட் கொள்ளபட்டவர்களோ தெய்வத்தைக் குருவாக பார்ப்பதில்தான் ஆசைப் படுகின்றார்கள். இவைகளைப் பார்க்கும் பொழுது குரு பக்தியே ஶ்ரேஷ்டமானது என்று தெரிகின்றது.

இங்கும், பகவான் *'குருவுருவாயொளிர் அருணாசலா'* என்கின்றார். *'குற்றமுற்றும் அறுத்தெனை'* என்றும் கூறுகின்றார். என்னுடைய குற்றத்தை முழுமையாக அறுத்துவிடு என்கின்றார். ஒரு வியாதியை குணம் செய்யும் பொழுது, அந்த வியாதியின் மூலத்தைத் தேடி களைந்தால்தான் வியாதி மறுபடியும் வராமல் இருக்கும்.

மேலெழுந்த வாரியாக செய்யும் வைத்தியம் பலனை அளிக்காது. ஒருவன் காமத்தை அடக்கி விட்டான், கோபத்தை அடக்கவில்லை என்றால் பலன் இல்லை. கோபத்தை அடக்கிவிட்டு பயத்தை அடக்கவில்லை என்றால் பலன் இல்லை. ஆனால், இவைகளுக்கெல்லாம் ஆதாரம் எது என்று பார்த்தால், மனம்தான் ஆதாரமாக உள்ளது என்று தெரிகின்றது. கோபமோ, பயமோ, காமமோ, வெறுப்போ, எல்லாம் மனதில்தான் உள்ளது. இவையெல்லாம் மனதின் விகாரங்களே. ஆகையால், இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக உள்ள மனதை அறுத்துவிட்டால் ஒரு குற்றமும் இராது.

*'குணமாய்ப் பணித்தருள் குருவருவாயொளிர்'*

என்கிறார். அருணகிரிநாதரும், 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' என்கின்றார். மற்றொரு இடத்தில் 'ஜபமாலை தந்த ஸத்குருநாதா' என்று முருகப் பெருமானைத் துதி செய்கின்றார். தெய்வத்தை ஏன் இவர்கள் குருவாக அழைக்கின்றார்கள்?

பகவத் கீதையில், ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுனனைப் பார்த்து, தியான யோகம், கர்ம யோகம், ஞான யோகம் போன்ற பல யோகங்களை உபதேசிக்கின்றார். அர்ஜுனனை மேற்படி ஸாதனைகளை பகவான் க்ருஷ்ணன் எதற்காக செய்யச் சொல்லுகின்றார்? இவைகளை அனுஷ்டிப்பதால் என்ன பயன்? என்று சொல்லுகின்றார். இவைகளை ஶ்ரத்தையுடன் அனுஷ்டிப்பது பகவத் தரிசனத்திற்காகவேதான். பகவான் யார்? ஸ்ரீ க்ருஷ்ணனேதான். அவனைத்தான் அர்ஜுனன் ப்ரதி க்ஷணமும் பார்த்துக் கொண்டிருக்க, இவ்வாறு யோக ஸாதனைகளைச் சொல்ல வேண்டிய அவசியம் யாது? பார்க்கும் திருஷ்டியில் வேறுபாடு இருப்பதுதான் காரணம்.

ராமாவதாரத்தில் ராமச்சந்திரமூர்த்தியை ஹனுமாரும் பார்த்தார். ராவணனும் தான் பார்த்தான். ஹனுமாருக்கு தெய்வமாகவும் ராவணனுக்கு விரோதியாகத் தெரிந்ததும் ஒரே ராமசந்திர மூர்த்தி தானே! ஆகவே கிருஷ்ணனை இதுநாள் வரை அர்ஜுனன், மனுஷ்யன் என்ற புத்தியுடன் பார்ப்பதால், அவனுக்கு பகவான் பக்கத்திலிருந்து ஞானம் இல்லை என்று தெரிய வருகின்றது. ஆகவேதான், அர்ஜுனனுக்கு ஸாதனைகளை உபதேசிக்கின்றான் ஸ்ரீ க்ருஷ்ணன்.

ஆகவே குருவின் அருளால் இறைவனைக் கண்ட ஸாதகன் கடைசியில் அறிவது யாதெனில் நம்முடைய குருவேதான் இறைவன் என்பதே. ஆகவே குரு, தெய்வம், ஆத்ம ஸ்வரூபம், இவைகளுக்கு ஒரு பேதமும் ஒரு காலும் இல்லை.

உண்மையான சீடனின் கடமை குருவைப் ப்ரகாசப்படுத்த வேண்டும். குருவின் பாதுகையை ஸேவிப்பதும், அன்னதானம் செய்வதும், குருவைப் ப்ரகாசப் படுத்துவதும் ஆத்ம ஞானத்தில் கொண்டு சேர்க்கும் என்று ஸாஸ்திரங்களில் வெகுவாக சொல்லப் பட்டிருக்கின்றன. மேலும், சீடன் குரு வாக்யத்தில் நிற்க வேண்டும். அவர் எதை உபதேசித்தாரோ அதை ஸதா மனனம் செய்து அதில் நிற்க முயற்சிக்க வேண்டும். குரு தனக்கு செய்த க்ருபையை நினைத்து நினைத்து உருக வேண்டும். அப்படி உருகுவதுதான் குரு பக்தி என்பது. குருவின் லக்ஷணம் யாது என்று பார்ப்போமானால் சீடன் எவ்வளவு தவறுகள் செய்தாலும் அவனிடம் உள்ள தோஷங்களைப் பார்க்காமல் குணங்களையேப் பார்க்க வேண்டும். குருவானவர் சீடனிடம் உள்ள குறைகளைப் பார்த்து தள்ளுவாராகின் அவன் கரையேறுவதற்கு கதியே இருக்காது. ஒரு கால் குருநாதர் அவனைக் கடிந்து கொண்டாலும், அவனுடைய குற்றங்களைக் கடிந்து கொண்டதாக ஆகுமே தவிர அவனை கடிந்ததாக ஆகாது.

எது பெரிய குற்றம்? பிறரிடம் உள்ள குற்றங்களைப் பார்ப்பதே முதல் பெரிய குற்றம். பிறருடைய தோஷங்களை சிந்தனை பண்ணுவதன் மூலம் அந்த பாபங்களும் நமக்கு வரும். மேலும் மெல்ல மெல்ல நம்மிடமும் அந்த தோஷங்கள் வளர ஆரம்பிப்பதைக் காணலாம்.

எது குணம்? எல்லா குற்றத்திற்கும் ஆதாரமாகவுள்ள மனதை எந்த ஒரு உபாயத்தைக் கைக்கொண்டாவது அடக்கி நாசம் செய்ய வேண்டி முயற்சித்தலே குணம் ஆகும். எந்த ஒரு குருநாதர் முன்பு நம் ஜீவ பேதம் அழிகின்றதோ அவரே ஸத்குருவாவார். ஆகவே உத்தம குருவானவர், 'குற்றமுற்றும் அறுத்து' ஜீவபேதத்தை நாசமாக்கக் கூடியவராக இருக்கவேண்டும். காட்டில் படுத்து உறங்கும் யானையானது ஸ்வப்னத்தில் சிங்கத்தைக் கண்டுவிட்டால், அந்த பெரிய சரீரத்தை ஆட்டிக் கொண்டு காடே அலறுகிற மாதிரி நடுங்கி நிற்கும். உத்தம குருவின் முன் நம் அஹங்காரம் அம்மாதிரியே நடுங்கும். ஜீவன் முக்தியை அளிப்பவரே குருவாவார்.

அவ்வாறே, ''ஹே அருணாச்சலா! நீ என் குருவாக இருந்து, எனது குற்றம் களைந்து எனை குணபரனாக பணித்து அருள்'' என்கின்றார் பகவான்.

(தொடரும்)

- முரளீதரதாஸன்

# செய்திகள்

### டிசம்பர் 1-ந் தேதி

நம் ஸ்வாமிகள், கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள காணி மடம் சென்று பகவான் யோகி ராம்சுரத்குமார் அவர்களின் ஜயந்தி வைபவங்களில் கலந்து கொண்டு பேசினார்.

---

### டிசம்பர் 11-ந் தேதி கைஸிக த்வாதஸீ

நம் மிஷன் சார்பில், திருமழிசை க்ஷேத்ரத்தில் ஸ்ரீ ஜகன்னாத பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நிகழ்த்தப்பட்டது.

---

### டிசம்பர் 14-ந் தேதி

சென்னை 'ப்ரேமிக பவன'த்தில் மாலையில் ஸ்ரீ விஷ்ணு கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது.

---

### டிசம்பர் 16-ந் தேதி

சென்னை ப்ரேமிக பவனத்தில் தனுர் மாத பூஜை ஆரம்பமாகிறது. தனுர்மாத முப்பது நாட்களும், காலை 5 மணிக்கு திருஞ்சனமும் பூஜையும் நடைபெற்று வருகின்றன. காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை 'ஹரே ராம' அகண்ட நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்று வருகின்றது.

---

### டிசம்பர் 22, 23-ந் தேதிகள்

சென்னை மேற்கு மாம்பலம் அயோத்யா மண்டபத்தில் ஸ்ரீ ராம் ஸமாஜ் சார்பில் நம் ஸ்வாமிகளின் "பக்த சரித்ரம்" "உபந்யாஸம்" தினமும் இரவு 7 மணி முதல் 9 மணி வரை நடைபெற்றது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### ஜனவரி 5-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிக பவனில் தினமும் இரவு 7 மணிக்கு அத்யயன உத்ஸவம் நடைபெறும்.

---

### ஜனவரி 8-ந் தேதி

வைகுண்டஏகாதஶீ - சென்னை ப்ரேமிக பவனத்தில் பரமபத வாசல் திறப்பு.

---

| | | |
|---|---|---|
| முன் அட்டைப்படம் | : | ஸமீபத்தில் கும்பகோணத்தில் நடைப்பெற்ற ஸ்ரீ மஹா பெரியவாளின் ஜயந்தி மஹோத்ஸவத்தின் பொழுது ஸ்ரீ ஸ்வாமிகளின் ப்ரவசன நிகழ்ச்சி. |
| பின் அட்டைப்படம் | : | நான்காவது ப்ரஹ்மோத்ஸவ வைபவத்தில் விடையாற்றி அன்று ஸ்ரீ ஸ்வாமிகள் சொக்கட்டான் ஆடும் காட்சி |

Photos in this Issue by : Sri R. Kalyanakrishnan

மங்களானி பவந்து

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98

| வேணு:3 | ஜனவரி 1998 | கானம்:6 |
| --- | --- | --- |




Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar